**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: **திரு. கி. ஆனந்த், எம்.எல்.,**

நீதித்துறை நடுவர் வள்ளியூர்

2023 வது வருடம், பிப்ரவரி மாதம், 18-ம் நாள், சனிக்கிழமை

**DVC. 15/2018**

**CNR. No. TNTL09-000559-2018**

| வ.எண்; | | விபரங்கள் |
|---|---|---|
| 1. | மனுதாரரின் பெயர் | சூசை மரிய ஜெமிலா |
| 2 | மனுதாரரின் கணவர் பெயர் | ஜோசப் ஆசிர் |
| 3 | மனுதாரரின் வேலை | - |
| 4 | மனுதாரரின் முகவரி | எண். 58, அழகிய நம்பியாபுரம் தெரு, பணகுடி, திருநெல்வேலி மாவட்டம். |
| 5 | மனுதாரரின் வயது | 27/2018 |
| 6 | எதிர்மனுதாரர்களின் பெயர் | 1 ஜோசப் ஆசிர்<br>2. அந்தோணி பெல்சன்<br>3. பனியரசி |
| 7 | எதிர்மனுதாரர்களின் தந்தை / கணவர் பெயர் | 1. அந்தோணி முத்து<br>2. அந்தோணி முத்து<br>3. அந்தோணி முத்து |
| 8 | எதிர்மனுதாரர்களின் வேலை | - |
| 9 | எதிர்மனுதாரர்களின் முகவரி | 1, 2, 3 வது எதிர்மனுதாரர்கள் மூவரும் எண். 26/9, மலைவீதி தெரு, தெற்கு கள்ளிகுளம், திருநெல்வேலி |

| | | |
|---|---|---|
| | | மாவட்டத்தில் குடியிருந்து வருகிறார்கள். |
| 10 | எதிர்மனுதாரரின் வயது | 1. 35/2018<br>2. 282018<br>3. 31/2018 |
| 11 | சம்பவம் | எதிர்மனுதாரர் மனுதாரரரையும் அவரது இரண்டு குழந்தைகளையும் பராமரிக்காமலும், கூடுதல் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியது சம்பந்தமாக |
| 12 | புகார் | 03.08.2018 |
| 13 | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி | 14.08.2018 |
| 14 | உத்தரவு | இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரரும் குழந்தைகளும் குடியிருந்து வரும் வாடகை வீட்டிற்கு வாடகைப் பணமும், பாதுகாப்பு உத்தரவும், ஜீவனாம்ச உத்தரவு, ஆகிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகிறது. |
| 15 | தீர்ப்பு நகல் அளிக்கப்பட்ட விபரம் | மனுதாரருக்கு இந்த தீர்ப்பின் நகல் இலவசமாக அளிக்கப்படுகிறது. |
| 16 | எதிர்மனுதாரர் மீது நிரூபிக்கப்பட்டவை | இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு வாடகை வீட்டிற்கு வாடகைப் பணமும், பாதுகாப்பு உத்தரவும், ஜீவனாம்ச உத்தரவு, ஆகிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகிறது. |
| 17 | காலதாமதத்திற்கான விளக்கம் | சாட்சியின் விசாரணையினால் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. |
| 18 | மசா.1 விசாரிக்கப்பட்ட தேதி | 26.03.2022 அன்று முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். |
| 19 | எ.சா.1 விசாரிக்கப்பட்ட தேதி | எ.சா.1 விசாரிக்கப்படவில்லை |

| | | |
|---|---|---|
| 20 | மாண்பமை மேலமை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம் | இந்த வழக்கில் மாண்பமை மேலமை நீதிமன்றத்தில் தடை உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை |
| 21 | எதிர்மனுதாரர் தலைமறைவாக இருந்த விபரம் | 1வது எதிர்மனுதாரரை 23.12.2021 அன்றும், 2 , 3 வது எதிர்மனுதாரர்களை 02.11.2018 அன்றும் ஒருதலைபட்சமாக்கி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. |

இவ்வழக்கு 14.08.2018 அன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன் 09.12.2022 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S. ராஜா , B.Com., B.,L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதால் தோன்றா தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டு சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இந்த வழக்கில், இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## இறுதி உத்தரவு

1. இம்மனுவானது மனுதாரர் தரப்பில், மனுதாரர் மற்றும் அவருடைய இரண்டு குழந்தைகளும் குடியிருக்க வாடகை வீட்டின் வாடகை முன்பணம் மற்றும் வாடகை பணம், பாதுகாப்பு உத்தரவு, 1வது எதிர்மனுதாரரின் பெயரிலுள்ள காலி மனையினையினை எந்த வில்லங்கமும் செய்யாமலிருக்க உத்தரவும், மனுதாரருக்கும் அவருடைய இரண்டு குழந்தைகளுக்கும் ஜீவனாம்ச உத்தரவும் கோரி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பிரிவு 12 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுவின் சுருக்கம்

2. மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் மனைவியும், 2, 3 வது எதிர்மனுதாரர்கள் 1வது எதிர்மனுதாரரின் சகோதர, சகோதரியும் ஆவார்கள். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரருக்கும், 1வது எதிர்மனுதாரருக்கும் கடந்த 11.05.2012 ம்

தேதி பணகுடி புனித சூசையப்பர் திருத்தலத்தில் வைத்து கிறிஸ்தவ முறைப்படி திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின்போது மனுதாரருக்கு 8 பவுன் தங்க நகையும் ரூ. 1லட்சம் ரொக்கப்பணமும் மற்றும் சீர்வரிசை பொருட்களும் வரதட்சணையாக கொடுக்கப்பட்டுள்ளது.

3. 1வது எதிர்மனுதாரர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து உதைத்துள்ளார். எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடம் கூடுதல் வரதட்சணையாக 10 பவுன் நகை வேண்டும் என மனுதாரரை கொடுமைப்படுத்தியுள்ளார்கள். 1வது எதிர்மனுதாரருக்கும், மனுதாரருக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளார்கள். 1வது எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை செய்து வந்த போது, மனுதாரரை விரட்டிவிட்டால் 1வது எதிர்மனுதாரரின் வருமானம் முழுவதும் 2, 3வது எதிர்மனுதாரர்களுக்கு கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில், 2, 3வது எதிர்மனுதாரர்கள் 1வது எதிர்மனுதாரரிடம் போன் மூலம், மனுதாரரரை தவறான நடத்தையில் இருப்பதாக பொய்யான சங்கதிகளைக் கூறியதால் 1வது எதிர்மனுதாரர் அடிக்கடி மனுதாரரிடம் சண்டையிட்டு வந்ததால் மனுதாரர் குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

4. 1வது எதிர்மனுதாரர் ஊருக்கு வந்தவுடன் கடந்த 24.07.2012 அன்று மனுதாரர் அவரது குழந்தைகளுடன் எதிர்மனுதாரர் வீட்டிற்கு 1வது எதிர்மனுதாரரை பார்க்க சென்றபோது எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களை இங்கு வரக்கூடாது என அடித்து விரட்டியுள்ளார்கள். 1வது எதிர்மனுதாரர் மற்றும் குழந்தைகளுக்காக மனுதாரர் சிறிது சிறிதாக வாங்கிய கடன் தொகை ரூ. 2,00,000/- த்தை மனுதாரர் கேட்டதற்கு 1வது எதிர்மனுதாரர் தர மறுத்து அடித்து மனுதாரரை விரட்டியுள்ளார். மனுதாரர் 1வது எதிர்மனுதாரருடன் சேர்த்துவைக்ககோரி வள்ளியூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்து புகார் மனு ரசீது (ரசீது எண். 190/2018) பெறப்பட்டுள்ளது. மனுதாரர் அவரது குழந்தைகளுடன் தற்போது மனுதாரரின் பெற்றோர் வீட்டில் கஷ்ட ஜீவனம் நடத்தி வருகிறார்.

5. எனவே , 1வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கும் அவரது குழந்தைகளுக்கும் குடியிருக்க வாடகை வீட்டிற்கு முன்பணம் ரூ. 25,000/- மும், மாத வாடகை ரூ. 3000/-

பணமும், மனுதாரருக்கும் அவரது குழந்தைகளுக்கும் பராமரிப்பு செலவுத்தொகையாக மாதந்தோறும் ரூ 10,000/- வழங்க உத்தரவிடுமாறும், 1ம் எதிர்மனுதாரரின் பெயரிலுள்ள ராதாபுரம் தாலுகா, கள்ளிகுளம் ஊரில் மலைவீதி தெருவிலுள்ள 3/4 சென்ட் காலி மனையினை வில்லங்கம் செய்யாமலிருக்க உத்தரவும், பாதுகாப்பு உத்தரவும் வழங்கவேண்டியும் மனுதாரர் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. மேற்படி மனுவானது இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அவர்கள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதால் 1வது எதிர்மனுதாரரை 23.12.2021 அன்றும், 2, 3வது எதிர்மனுதாரர்களை 02.11.2018 அன்றும் ஒருதலைபட்சமாக்கி உத்தரவிட்டுள்ளது.

7. மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக நிருபணவாக்குமூலத்தின் வாயிலாக விசாரித்து மனுவில் கண்ட விபரங்களை ஒட்டி சாட்சியமளித்துள்ளார், மனுதாரர் மூலமாக 1. மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் திருமண பத்திரிக்கை அசல் **ம.சா.ஆ.1,** 2. மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் திருமண புகைப்படம் **ம.சா.ஆ.2**, 3. மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் திருமண பதிவு சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.3,** 4. மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் குழந்தை அந்தோணி ஜோவின் பிறப்புச்சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.4**, 5. மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் குழந்தை ஆல்பின் ஜெஸ்ஸோ பிறப்புச்சான்றிதழ் அசல் **ம.சா.ஆ.5,** 6. வள்ளியூர், அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரர் கொடுத்த மனு ரசீது எண். 190/2008 அசல் **ம.சா.ஆ.6** ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. அத்துடன் மனுதாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8. எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிய, சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

9. மனுதாரர் தரப்பில் அவரது கற்றறிந்த வழக்கறிர் தனது வாதத்தில் மனுவை ஒட்டி வாதிட்டுள்ளார். மேலும் மனுதாரரின் மனு நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் கூற்றை எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் வைக்கப்படவில்லை எனவும் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்க மனுதாரர் தகுதியானவர்

என்றும் வாதிடப்பட்டுள்ளது.

**10. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி என்னவென்றால், மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் அவருக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும்.**

11. மனுதாரரின் குழந்தைகளின் பெயர்களை குறிப்பிட்டு மனுதாரர்களாக சேர்க்கப்படவில்லை. என்றாலும், மேற்படி மனுதாரரின் 2 குழந்தைகளின் நலனை கருதி இந்த நீதிமன்றம் மேற்படி மனுதாரர்களின் 2 குழந்தைகளையும் இந்த வழக்கில் மனுதாரர்களாக கருதுகிறது.

12. மனுதாரர்களின் மனுவை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த எதிருரையும் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி மனுதாரர்களின் வழக்கை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த எதிர்வாதமும் எடுத்துரைக்கப்படவில்லை. 1வது எதிர்மனுதாரரின் வருமானம் தொடர்பாக மனுதாரர்கள் தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. ம.சா.ஆ.4, ம.சா.ஆ.5 ஆகிய பிறப்பு சான்றிதழ்களை பார்வையிடும்போது 1வது எதிர்மனுதாரர் தான் மனுதாரரின் 2 குழந்தைகளின் தந்தை என்பது புலனாகிறது.

13. 1வது மனுதாரர் தனக்கு தற்போது எந்தவித வருமானமும் இல்லை என்றும் சொத்து மற்றும் வருமானம் தொடர்பான ஆணையுறுதி பத்திரம் தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள், 1வது எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. மனுதாரர் தனது மனுவில் 2, 3 எதிர்மனுதாரர்களின் தூண்டுதலின் காரணமாக மனுதாரர்களை பராமரிக்காமல் 1வது எதிர்மனுதாரர் கைவிட்டதாகவும், மனுதாரர் அவரது குழந்தைகளுடன் எந்தவித வருமானமும் இல்லாமல் கஷ்டப்பட்டுவருவதாகவும்,1வது எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை செய்து அதிகம் சம்பாதிப்பதாகவும், 1வது எதிர்மனுதாரருக்கும், குழந்தைகளுக்கும் பணம் தேவைப்பட்டதால் மனுதாரர் கடன் வாங்கி ரூ. 2,00,000/- வரை செலவழித்துள்ளதாகவும், அதனால் மனுதாரருக்கு தற்போது ரூ. 2 லட்சம் வரை கடன் உள்ளதாகவும், ம.சா.1 தனது முதல் விசாரணை ஆணையுறுதி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். 1வது மனுதாரரின் முதல் விசாரணை ஆணையுறுதி

பத்திரத்திற்கும் மனுதாரரின் மனுவிற்கும் எந்தவித முரண்பாடுகளும் இல்லை.

14. மனுதாரர் மனு மற்றும் முதல்விசாரணை ஆணையுறுதி பத்திரத்தைப் பார்வையிடும்போது மனுதாரர்களுக்கு எந்தவி வருமானமும் இல்லை என்றும், 1வது எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை செய்து அதிகம் சம்பாதித்து வருவதாகவும், மனுதாரர்களை 1வது எதிர்மனுதாரர் பராமரிக்காமல் இருந்துவருவதும் புலனாகிறது. 1வது எதிர்மனுதாரர் மனுதாரரின் கணவர் என்ற அடிப்படையிலும், 1வது எதிர்மனுதாரர் , 2, 3 வது மனுதாரர்களான மனுதாரரின் குழந்தைகளின் தந்தை என்ற அடிப்படையிலும் மனுதாரரையும் அவரது 2 குழந்தைகளையும் பராமரிக்கவேண்டியது 1வது எதிர்மனுதாரரின் கடமையாகும். மனுதாரரின் வாதத்தை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்தவித எதிர்வாதமும் செய்யவில்லை என்பதால் இந்த மனுவானது பகுதியாக அனுமதிப்பது நீதியின்பால் உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. எனவே, மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் **மனுதாரர்களின் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு** கீழ்க்கண்ட உத்திரவுகள் பிறப்பிக்கப்படுகின்றது.

15(1). மனுதாரர்களை எவ்விதத்திலும் குடும்ப வன்முறைக்கு உள்ளாக்கவோ, அல்லது குடும்ப வன்முறை செய்ய தூண்டுதலோ செய்யக் கூடாது என 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக DV Act பிரிவு 18ன் கீழ் பாதுகாப்பு உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

15(2). மாவட்ட சமுக பாதுகாப்பு அலுவலர், திருநெல்வேலி(1), காவல் ஆய்வாளர், வள்ளியூர் காவல் நிலையம்(2) மற்றும் காவல் ஆய்வாளர், பணகுடி காவல் நிலையம், (3) ஆகியோர்கள், மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர்களால் எந்தவிதத்திலும் குடும்ப வன்முறையோ, தொந்திரவோ நிகழாமல் பாதுகாப்பு வழங்க உத்திரவிடப்படுகிறது.

15(3). மனுதாரர் மற்றும் அவரது இரண்டு குழந்தைகளும் தனியாக வாடகை வீட்டில் குடியிருக்க வாடகை வீட்டிற்கு முன்பணமாக ரூ. 25,000/- மும், வாடகை பணம் ரூ. 3,000/- மும் 1வது எதிர்மனுதாரர் மனுதாரருக்கு இந்த உத்தரவு

பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கொடுக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

15.(4) 1ம் எதிர்மனுதாரர் பெயரிலுள்ள ராதாபுரம் தாலுகா, கள்ளிகுளம் ஊர், மலைவீதி தெருவில், உள்ள 3/4 சென்ட் காலி மனையினை எந்த வில்லங்கமும் செய்யக்கூடாது என்ற கோரிக்கை தேவையில்லை என்பதால் அந்த கோரிக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது.

15(5). 1வது எதிர்மனுதாரர், மனுதாரருக்கும், அவரது 2 குழந்தைகளுக்கும் மாத ஜீவனாம்சமாக தலா ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) வீதம் ஆக மொத்தம் ரூ. 15,000/- ( ரூ. பதினைந்தாயிரம் மட்டும்) இம்மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிட்டு கொடுக்க வேண்டும் எனவும், அவ்வாறு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்ட தேதி வரை கொடுக்க வேண்டிய ஜீவனாம்ச நிலுவைத் தொகையை இந்த உத்திரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாதத்திற்குள் மனுதாரர்களுக்கு நேரடியாக செலுத்த வேண்டும் எனவும், இந்த உத்திரவிற்கு பிறகு ஒவ்வொரு மாதமும் கொடுக்க வேண்டிய மாத ஜீவனாம்ச தொகை ரூ.15,000/-த்தை( ரூ. பதினைந்தாயிரம் மட்டும்) ஒவ்வொரு மாதமும் ஆங்கில மாதம் 5-ம் தேதிக்குள் மனுதாரர்களுக்கு நேரடியாக செலுத்தவேண்டும் என DV Act பிரிவு 20 ன் கீழ் உத்திரவிடப்படுகிறது.

15.(6). மனுதாரர் ரூ.2,00,000/- கடனில் இருப்பதாக மனுவில் குறிப்பிட்டுள்ளதால் 1வது எதிர்மனுதாரர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ரூ. 2,00,000/- த்தை மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்று DV Act 20 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

15.(7). மனுதாரர்களுக்கு செலவுத்தொகையாக 1வது எதிர்மனுதாரர் ரூ. 5,000/- மட்டும் கொடுக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

15(8). 1வது எதிர்மனுதாரருக்கு தண்டனை கொடுக்க வேண்டும் என்றும், நஷ்ட ஈடு வேண்டும் என்றும் கேட்டுள்ளது தேவையில்லை என்பதால் அந்த கோரிக்கை தள்ளுபடி செய்யப்படுகிறது.

16. இந்த உத்திரவின் நகலினை மனுதாரர் மற்றும் 1வது எதிர்மனுதாரருக்கு இலவசமாக வழங்க உத்திரவிடப்படுகிறது.

17. இந்த உத்திரவின் நகலினை மாவட்ட சமுக பாதுகாப்பு அலுவலர், திருநெல்வேலி, காவல் ஆய்வாளர், வள்ளியூர் காவல் நிலையம் மற்றும் காவல் ஆய்வாளர், பணகுடி காவல் நிலையம், ஆகியோருக்கு நடவடிக்கைக்காக அனுப்ப உத்திரவிடப்படுகிறது.

18. மேலும், மேற்படி உத்திரவுகளை எதிர்மனுதாரர்கள் மீறும் பட்சத்தில் அவர்களுக்கெதிராக மனுதாரர் குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் பிரிவு 31ன் கீழ் மனு செய்து வழக்கு தொடரலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த உத்தரவானது இன்று 2023ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 18-ம் நாள் சனிக்கிழமை அன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய என்னால் பகரப்பட்டது.

K ANAND

Digitally signed by K ANAND
Date: 2023.02.18 13:40:03 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**

**இணைப்பு:**

**<u>மனுதாரர் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி</u>:**

1. ம.சா.1 – சூசை மரிய ஜெமிலா

**<u>மனுதாரர் தரப்பில் குறியிடப்பட்ட ஆவணங்கள்</u>:**

1. ம.சா.ஆ.1 - மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் திருமண பத்திரிக்கை **- ம.சா.1**
2. ம.சா.ஆ.2 - மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் திருமண புகைப்படம் **- ம.சா.1**
3. ம.சா.ஆ.3 - மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் திருமண பதிவு சான்றிதழ் **- ம.சா.1**
4. ம.சா.ஆ.4 - மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் குழந்தை அந்தோணி ஜோவின் பிறப்புச்சான்றிதழ் அசல் **- ம.சா.1**
5. ம.சா.ஆ.5 - 1மனுதாரர் 1வது எதிர்மனுதாரரின் குழந்தை ஆல்பின்

ஜெஸ்ஸோ பிறப்புச்சான்றிதழ் அசல் - **ம.சா.1**

6. ம.சா.ஆ.6 - வள்ளியூர், அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் மனுதாரர் கொடுத்த மனு ரசீது எண். 190/2008 அசல் - **ம.சா.1**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை**

**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை**

K ANAND Digitally signed by K ANAND Date: 2023.02.18 13:40:15 +0530

**நீதித்துறை நடுவர்,**

**வள்ளியூர்.**

நகல்:

1. மனுதாரர்
2. மாவட்ட சமூக பாதுகாப்பு அலுவலர், திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி.
3. காவல் ஆய்வாளர், வள்ளியூர் காவல்நிலையம்.
4. காவல் ஆய்வாளர், பணகுடி காவல்நிலையம்.